Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17





Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME



தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி
MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை





Delivered by India Post www.indiapost.gov.in



ஜூன் 12 - ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் ஆண்டு விழா
- விவேகானந்தா பள்ளி, ஸ்ரீபெரும்புதூர்



ஜூன் 3 - கடலூர் அருகில் மதிகிருஷ்ணாபுரம் ஸ்ரீபட்டாபிராமர்
கோவில் - கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சத்சங்கம்





ஜூன் 4 சென்னை நாரத கான சபாவில் பம்மல் ஸ்ரீ ஏகாம்பரம் அவர்கள்
எழுதிய "மஹாபெரியவாளும் ஏகாம்பரம் ஆகிய நானும்" நூலின் ஆங்கில
மொழிபெயர்ப்பு வெளியீடு- ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள் ஜயந்தி தினம



ஜூன் 20 அம்பாசமுத்திரம் நாமத்வாரின் ஆண்டு விழா





மே - ஜூன் - அமெரிக்காவில் சத்சங்கங்கள் பூர்ணிமாஜி



மே -ஜூன் - வளைகுடா நாடுகளில் சத்சங்கம் - ராமானுஜம்ஜி












ஜூன் 13 - G.O.D. இந்தியா டிரஸ்ட் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு
Career Guidance Workshop "UDYOG" - G.R.T Centre சென்னை

சிங்கப்பூரை சேர்ந்த ஸ்ரீமதி ஹரிலக்ஷ்மி ஜெயச்சந்திரன் – ஸ்ரீஜெயச்சந்திரன் தம்பதிகள், பகவான் ரமணரின் பக்தர்கள். ஸ்ரீஜெயச்சந்திரன், பல்வேறு மிக உயர்ந்த பதவிகளை வகித்த போதிலும், தம்பதிகள் இருவரும் ஆத்ம குணம் மிக்கவர்கள். பல மஹான்களுக்கும் அவர்களுடைய ஸ்தாபனங்களுக்கும், மிக அதிகமான அளவில் பொருளுதவி செய்து வருகின்ற போதிலும், யாருக்கும் அதை தெரிவிக்கவும் கூட மாட்டார்கள். சிங்கப்பூரை சேர்ந்த Hindu Endowment Board Chairman பதவியையும் வகித்து வருகின்றார்கள். உயர்ந்த பதவிகள் பல வகித்தாலும், யாரிடமும் கர்வம் இல்லாமல், மிகவும் எளிமையாக பழகும் ஸ்வபாவம் உடையவர். நம்முடைய ஸ்தாபனங்களுக்கும், பல விதத்திலும் பக்க பலமாக இருந்து வருகின்றார். முக்கியமாக நம்முடைய ஆஸ்ரம வளாகத்தில் எழுந்தருளி உள்ள கன்யாகுமரி ஆஞ்சநேயர் திருப்பணி முழுவதையும் அவர் ஒருவராகவே செய்தார். சிங்கப்பூரில் நாமத்வார் வருவதற்கு அவர் ஒரு மிக முக்கியமான காரணம். இந்த முறை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் திருப்பணியை, பெருமாள், தனக்கே உரிய பாணியில் நம்மை செய்ய சொல்லி நியமனம் செய்தான். அதுவும் குறுகிய காலத்திற்குள் செய்ய வேண்டி இருந்தது. பணத்தை பணம் என்று பாராமல் செலவழித்து, அந்த திருப்பணியை ஏற்றுக்கொண்டு செய்து முடித்தார். எல்லோரும் போற்றும்படியாக, திருப்பணி அமைந்து சம்ப்ரோக்ஷணமும் மிகவும் விமரிசையாக நடந்தேறியது. பெருமாளும் உகப்புடன் ஏற்றுக்கொண்டான். அந்த தம்பதிகளுக்கு, பகவானின் பரிபூரணமான க்ருபையையும் எங்களுடைய நன்றியையும் தெரிவித்து கொள்கிறோம்.

– டாக்டர்.ஆ.பாக்யநாதன்











ஜூன் 12 – சென்னை திருவல்லிக்கேணி
ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் கோவில் சம்ப்ரோக்ஷணம்

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 ஜூலை 2015 கானம்: 12

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-232 | 05 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 10 |
| பாகவத பழம்- ஸ்க 2/26 | 12 |
| திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி | 14 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| சனாதன கோஸ்வாமி | 26 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 28 |
| ப்ருந்தாவன கண்ணன் | 33 |

ஈதல் அறம்; தீவினை விட்டு ஈட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொற் - றாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு -அவ்வை

தீய வழியில் அல்லாது நேர்மையான வழியில் சம்பாதிப்பதே பொருள்; அதை சுயநலம் பாராட்டாது பிறருக்காக, பொது தர்மத்திற்காக, பரோபகாரத்திற்காக செலவழிப்பதே அறம்; மனிதனுக்கு விதிக்கப்பட்ட கடமைகளுள், பரோபகாரமே லக்ஷியமாய் இருக்கிறது; கணவனும் மனைவியும் மனதிலே ஒன்றுபட்டு, அறவாழ்வினால் கிடைத்த அன்புடன் இணைந்து வாழ்தலே இன்பம். இறைவனை நினைந்து வாழ்வதால் அறம், பொருள், இன்பம் இம்மூன்றும் இணைந்த மனித பிறவி பந்தத்திலிருந்து விடுபடுவதே பேரின்ப முக்தி.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: செஞ்சுருட்டி *தாளம்: ஆதி*

பாவங்களை மன்னித்தருள்வாய்
என் தந்தையே வந்தனம் உந்தனுக்கு
அன்று முதல் இன்று வரை நான் செய்த
(பாவங்களை ...)

சந்த்ரபாகா நதிக்கரையில் கோவில் கொண்டவனே
பண்டரிநாதனே பாண்டுரங்கனே
(பாவங்களை ...)

பாதம் இரண்டையும் ஆற தழுவிக் கொண்டேன்
தாமரை கைகளை தலையில் வைத்தருள்வாய்
பாவங்கள் இனி ஏதும் நான் செய்யாமல்
பக்கம் இருந்தெனை காத்தருள்வாய்
(பாவங்களை ...)

உனை விட்டால் எனக்கு கதி வேறில்லை - இதை
நினைவில் கொண்டு அருள் செய்திடுவாயே
தனிமையில் அமர்ந்துனை பாடுவதையே - என்
பணியாக என்றும் பணித்திடுவாயே (பாவங்களை...)

முன் அட்டை: திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் - கோவில் சம்ப்ரோக்ஷணம் - ஜூன் 12, 2015
பின் அட்டை - விவேகானந்தா பள்ளியில் ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் ஆண்டு விழா - ஜூன் 12



# மதுரமான மஹநீயர் - 232

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

ஒரு குழந்தையை தாய்தான் தாலாட்டி உறங்க வைக்கின்றாள். அவளேதான் நேரம் வந்ததும், தட்டி எழுப்புகின்றாள். அப்படியே அஞ்ஞானத்தில் மூழ்கி இருக்கும் நம்மை, அதிலிருந்து விடுவிக்க, பகவான் சில துன்பங்களை தந்து பிறவிதளையிலிருந்து விடுவிக்கின்றான். இதை குருநாதர் "துக்கம் வருவதும் இறைவனின் அருளாலே விரக்தி வளரவே உந்தீபற; வராதாயின் வீணே என்று உந்தீபற" என்று கலிதர்ம உந்தியாரில் சொல்கின்றார்கள். சமீபத்தில், இது குறித்து மதுரபுரி ஆஸ்ரமத்தில், மிக விரிவாக பேசிக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து, இதற்கான பல மேற்கோள்களை காட்டி பேசினார்கள். அது மிகவும் ஆழ்ந்த கருத்து மிக்கதாகவும், எல்லோரும் அவசியம் கேட்டு படித்து பயனுற வேண்டியது என்பதாலும் இங்கு அதை பகிர்ந்து கொள்கிறேன்.

உலகில் இரண்டு மார்க்கங்கள் உள்ளன. அவை பிரவ்ருத்தி மார்க்கம் மற்றும் நிவ்ருத்தி மார்க்கம். ப்ரவ்ருத்தி மார்க்கம் என்பது உலக வாழ்வில் ஈடுபடுவதாகும். நிவ்ருத்தி மார்க்கம் என்பது, இந்த சம்ஸார சுழலிலிருந்து விடுபட்டு பகவானை அடைவதற்கான மார்க்கமாகும். எப்படி ஒருவன் மேற்கு திசையை நோக்கி போகும்பொழுது, அவன் கிழக்கு திசையை விட்டு விலகி, தூரம் சென்று கொண்டிருக்கிறானோ, அதேபோல் இவ்விரு மார்க்கங்களில், ஒன்றில் பயணிக்கும்பொழுது, மற்றொன்றிலிருந்து ஒருவன் விலகிக்கொண்டே செல்வான்.

இரு மார்க்கங்களிலும் செல்பவர்களின் குறிக்கோள் சுகம் அல்லது ஆனந்தத்தை அடைவது. ப்ரவ்ருத்தி மார்க்கத்தில் செல்பவர்கள் கல்யாணம், குழந்தை, வீடு, பணம் என்று எதிலாவது அச்சுகத்தை அடைய எண்ணுகிறார்கள்.

இவைகள் எவ்விதத்திலும் ஒருவனுக்கு கடைசியில் துக்கத்தை விளைவிக்கின்றன. நிவ்ருத்தி மார்க்கத்தில், செல்பவர்களே இந்த ஆனந்தத்தை சரியான இடத்தில் தேடுகிறார்கள்.

ப்ரவ்ருத்தி மார்க்கம் என்பது ஜீவசாமான்யர்களுக்கு ஸ்வபாவம். இதற்கென்று முயற்சி எதுவும் தேவையில்லை. உதாரணத்திற்கு ஒரு வீட்டில் குழந்தைகள் தானாகவே விளையாடுவார்கள்; டி.வி. பார்ப்பார்கள்; சினிமா பாட்டு பாடுவார்கள். இவைகளை, அவர்களுக்கு சொல்லித்தர வேண்டுமென்ற அவசியமே இல்லை. இதுவே, ஒரு பஜனையோ ஸ்லோகமோ அல்லது சத்சங்கமோ என்றால், அவர்களை வற்புறுத்த வேண்டி இருக்கிறது.

காரணம் மனது உலகத்தை நோக்கி சுலபமாக செல்கிறது. இந்திரியங்கள் மூலமாக வெளியே செல்லும் மனது, விஷயங்களை அனுபவித்து, தீயில் விட்ட நெய்யை போல் திருப்தி அடையாமல், மேலும் மேலும் அந்த விஷயங்களை கேட்கிறது. ஆகையால், உலக வாழ்க்கையை நடத்த பெரும் முயற்சி எதுவும் தேவை இல்லை. உண்மையில் தேவைகளே அல்லது ப்ரச்சனைகளே ஒருவரது வாழ்க்கையை நடத்தி சென்று விடும். ஒருவன் கடன் வாங்கி ஒரு மாதத்திற்குள் அதை திரும்பி தர வேண்டும் எனும் நிலையில், அதை குறித்து சிந்தித்து உழைப்பதே, ஒருவனது வாழ்க்கையை நடத்துவதற்கான ஹேதுவாகி விடுகின்றது. ஆக, ப்ரவ்ருத்தி மார்க்கமே ஸ்வபாவமானது. சுலபமானது.

ஆனால், சம்ஸாரத்திலிருந்து விடுபட நிவ்ருத்தி மார்க்கத்தைத்தானே அவலம்பிக்க வேண்டும்? மோக்ஷத்தை விரும்புபவர்கள் இதில்தானே செல்ல வேண்டும்? அப்படி இருக்க, மனதை எப்படி இதில் கொண்டு வருவது என்றால், அது நமது சாமர்த்தியம் இல்லை. ஒருவருக்கு நிவ்ருத்தி மார்க்கத்தில் மனம் திரும்பி, பகவான்தான் வேண்டும் என்ற எண்ணம் வருவது அவ்வளவு சுலபமல்ல.

பகவான், எந்த ஒரு ஜீவனை தன்னிடம் சேர்த்து கொள்ள வேண்டுமென்று எண்ணுகிறானோ, அவன் மீது க்ருபை செய்கிறான். ஆனால், இந்த க்ருபையை பகவான்

எப்படி செய்கிறான் தெரியுமா? துக்கமென்ற வ்யாஜத்தை வைத்தே செய்கிறான். சம்ஸ்காரமுள்ள மனதில், துக்கம் எனும் அடி விழும்பொழுது, மனது தானாக நிவ்ருத்தி மார்க்கத்தில் செல்கிறது. பாகவதத்தில், பல சரித்திரங்கள் இதற்கு ப்ரமாணம்.

முதலில் நாரத சரித்திரத்தில் நாரதருக்கு சத்சங்கம் கிடைத்து விடுகிறது. அப்பொழுதும், அவர் தீவிரமாக இல்லாமல் லகுவாகவே கீர்த்தனம், ஸ்ரவணம் முதலியவைகளை செய்து வந்தார். ஆனால், தாயாரின் மரணம் என்ற துக்கம் வந்தபோது, அவர் ஸர்வசங்க பரித்யாகம் செய்து காட்டிற்கு சென்று சாக்ஷாத்காரம் பெற்றார்.

பிறகு பாகவதத்தில் உத்திரை சரணாகதி செய்கிறாள். காரணம், அவள் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் மீது அஸ்வத்தாமா பிரம்மாஸ்திரம் ஏவி விட்டான். இப்படியொரு ஆபத்து வந்த பொழுதுதான், உத்திரை சரணாகதி செய்கிறாள். அப்பொழுது, பகவான் காப்பாற்றும்பொழுதுதான் குந்தியும் ஸ்துதி செய்கிறாள்.

அடுத்தபடியாக யுதிஷ்டிரர். அவர் பாரத போர் முடிந்ததும், நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார். ஆனால் பகவான் லீலையை முடித்துக்கொண்டு வைகுண்டம் சென்று விட்டான் என்பதை கேட்டதும், இடி விழுந்தாற் போலிருந்தது. அக்கணமே நாடு, குடும்பம் எல்லாவற்றையும் விட்டு விட்டு, இமயமலையை நோக்கி சென்று, அப்படியே ஸ்வர்க்கத்தையும் அடைந்தார்.

இதன்பின் பரீக்ஷித்து. அவனும் நன்றாக அரசாட்சி புரிந்து வருகிறான். ஒருமுறை, காட்டிற்கு வேட்டையாட சென்றபொழுது, அங்கு சமீகர் என்ற மஹரிஷி சமாதியில் இருப்பதை பார்க்கிறான். பசி தாகத்துடன் இருந்த அவனை உபசரிக்காமல் இருந்த அவரின் மீது கோபங்கொண்டு, அவர் கழுத்தில் ஒரு உயிரற்ற பாம்பை போட்டு விட்டு சென்று விடுகிறான். பின், இதை அறிந்த அந்த ரிஷியின் பிள்ளையான ஸ்ருங்கி பரீக்ஷித்திற்கு இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷகன் என்னும் நாகம் தீண்டி மரணம் ஏற்படும் என்று

சபித்து விடுகிறான். இந்த சாபத்தை பற்றி அறிந்த உடன், பரம நிர்வேதம் அடைந்து, பரீக்ஷித் கங்கைக்கரையை அடைந்து ப்ராயோபவேசம் மேற்கொள்கிறான். இந்த சாபம் எனும் துக்கம் ஏற்பட்டதுதான், பரீக்ஷித் ஏழுநாட்களில் பாகவத சிரவணம் செய்து முக்தி அடைய ஹேதுவாக இருந்தது.

இதன்பிறகு, தக்ஷனுடைய சரித்திரத்தில், தக்ஷன் மிகுந்த அகந்தையுடன் பரமசிவனை நிந்திக்கிறான். இதன் விளைவாக சர்வ நாசம் ஏற்படுகிறது. அதில் தக்ஷன் தலையே வெட்டி வீழ்த்தப்படுகிறது. பிறகு பரமேஸ்வரனின் க்ருபையால், அவன் உயிர் பெற்று, பின் திருந்துகிறான். இங்கேயும் தக்ஷனுக்கு புரியும்படியான ஒரு அடியை போட்ட பின்புதான், அவனுக்கு சத்புத்தி ஏற்படுகின்றது.

அடுத்து த்ருவனுடைய சரித்ரம். த்ருவன் தனது அப்பாவின் மடியில் அமர ஆசை கொள்கிறான். உத்தானபாதன் உடனே சம்மதித்து, அவனை மடியில் அமர்த்தி கொண்டிருந்தால், இன்று துருவ சரித்திரமே இருக்காது. சுருசியின் கடுமையான சொற்களையும், அவள் துருவனை தள்ளியதும்தான் த்ருவன் மனதில் தாங்க ஒண்ணாத துக்கத்தை ஏற்படுத்தியது. அந்த துக்கத்தின் விளைவாகவே, அவன் காட்டிற்கு சென்று கோரமான தவம் புரிந்து, பகவத் சாக்ஷாத்காரம் பெற்றான்.

பின் ஜடபரதர் சரித்திரத்தில் ஒரு மான் காரணமாக தனது தவ வாழ்விலிருந்து, அவர் நழுவ நேர்கிறது. இதன் விளைவாக, அவரே ஒரு மான் பிறவி எடுக்கவும் நேர்கிறது. அடுத்த ஜன்மத்தில் அவர் ஒரு ப்ராம்மண குடும்பத்தில் பிறக்கும்பொழுது, தனது முன் ஜன்மங்களில், தான் தவ வாழ்விலிருந்து வீழ்ந்த அந்த ஸ்ம்ருதியின் துக்கம்தான் அவரை பரம ஜாக்கிரதையாக உலகில் பழக தூண்டுகிறது. அதன் விளைவாகவே, அவர் இப்பிறவியில் ஞானத்தையும் அடைகிறார்.

ஆறாவது ஸ்கந்தத்தில், அஜாமிளனுடைய சரித்திரம். அவன் முதலில் நல்லொழுக்கமுடைய ஒரு

ப்ராம்மணனாகத்தான் இருக்கிறான். ஆனால் ஒரு தாசியின் சங்கத்தால் அவன் வீழ்கிறான். அதன்பின் ஒரு அடி அவனுக்கு விழுகிறது. இதன் விளைவாகவே, அவன் இந்த பிறவியிலேயே வைகுண்டத்தை அடைந்து விடுகிறான்.

இந்த ஸ்கந்தத்திலேயே பின்பு, சித்ரகேதுவின் கதை வருகிறது. அவனும் புத்ரசோகம் எனும் மாபெரும் துக்கத்தால் துயருற்றான். அப்பொழுது நாரதர், தேவலர் மற்றும் ஆங்கிரஸர் ஆகியோரிடமிருந்து உபதேசம் பெற்றதும், அவன் பகவத் சாக்ஷாத்காரத்தை அடைகிறான்.

கஜேந்திரனும் காட்டின் ராஜாவாக சௌக்கியமாகவே இருந்து வந்தான். பின் அவன் ஏன் பகவானிடம் சரணாகதி செய்தான்? அவனுக்கு ப்ராணசங்கடம் வந்தது. அதனால்தான் அவன் பகவானை சரணடைந்தான். அவன் உயிரே போய்விடும் என்ற அபாயமும் துக்கமும்தான் அவனை சரணாகதி செய்ய தூண்டியது. அதன் பயனாய், அவன் மோக்ஷமும் அடைந்தான்.

அம்பரீஷ சரித்திரத்திலும் துர்வாசர் பகவானை நோக்கி ஓடுகிறார். காரணம்? அவரை சுதர்சனாஸ்திரம் பின் தொடர்வதுதான். அப்படி ஒரு ஆபத்து இருப்பதால்தான், அவர் பகவானை நோக்கி ஓடுகிறார்.

ஒரு ஜீவனை பகவான் தன்னிடம் சேர்த்துக்கொள்ள எண்ணும்பொழுது, முதலில் சத்சங்கத்தையும் குருவையும் அந்த ஜீவனுக்கு அருள்கிறான். பின்பு தன்னை அடைய வேண்டும் என்ற தீவிரத்தை கொடுக்க, அந்த ஜீவனுக்கு ஒரு துக்கத்தையும் அளிக்கிறான். சத்சங்கம் மற்றும் குருவின் க்ருபையால் அந்த துக்கத்தின் விளைவாக, இந்த உலகத்தில் ஒரு வெறுப்பும் பகவான் மீது பிடிப்பும் அதிகரிக்கின்றது. அப்படி துக்கம் வரும்பொழுது ஒரு வேகம் வரும். அந்த உத்வேகத்தோடு பகவானை பற்றி அவனை அடைய முயல வேண்டும். ஆன்மீக வாழ்வில் தீவிரமாக முன்னேற துக்கங்களை பயன்படுத்தி கொள்வதே இறைவனின் நோக்கம்! துக்கம் வருவதும் இறைவனின் அருளாலே!



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: குபேர புத்திரர்களான நளகூபரன் மற்றும் மணிகிரீவன் குடித்து விட்டு, மரியாதை இன்றி நாரத மஹரிஷி முன் விழுந்தபொழுது, ப்ருந்தாவனத்தில் மரமாக இருக்குமாறு நாரதர் சாபம் தருகிறார். சாப விமோசனத்தை பகவானே அளிப்பான் எனவும் சொல்கிறார். இங்கு அவர்களுக்கு, நாரதரின் சாபமே அனுக்ரஹமாக அமைகிறது.

அவர்களை திருத்துவது என்பது தன்னால் முடியாது; பகவானால்தான் முடியும் என்பதால் அப்படி சொன்னாரா? அல்லது, சாதுக்கள் தங்களுக்கு தீமை செய்தாலும் கூட நன்மையை மட்டும்தான் செய்வார்களா?

பதில்: யாராவது கம்பீரமாக நடந்து வருவதை பார்த்தால், சிருங்கேரி சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் "சங்கர பாஷ்யம்" மாதிரி கம்பீரமாய் வருகிறாய் என்பார். ஏனெனில், அதுதான் அவர் மனதில் உள்ளது. அவர் மனதில் உள்ளதுதான் வார்த்தைகளில் வெளிப்படுகிறது.

அதுபோல், நாரதரும் எப்பொழுதும் பகவத் ஸ்மரணையிலேயே ப்ருந்தாவன லீலைகளை ஸ்மரித்தபடியே இருப்பவர். அதனால், அவரை அவமரியாதை செய்தபொழுதும், அவர் வாயிலிருந்து அந்த லீலைகள் சம்பந்தமாகவே வார்த்தைகள் வெளி வருகிறது.

சாதுக்கள் யாருக்கும் நன்மையோ கெடுதலையோ செய்ய வேண்டும் என நினைக்க மாட்டார்கள். உலக சிந்தனையே அவர்களிடம் இருக்காது. அவர்கள் மனம் பகவத் சிந்தனை மற்றும் சத்விஷயத்திலேயே இருக்கும். ஆகையால், அவர்கள்

வாயிலிருந்து வார்த்தைகளும், அது சம்பந்தமாகத்தான் வெளிப்படும்.

**கேள்வி:** அக்னி, வாயு, இந்திரன், காயத்ரி போன்றவர்களை தேவதைகள் என்றும் நாராயணனை தெய்வம் என்றும் சொல்கின்றோமே? ஏன்?

**பதில்:** எப்படி ஜபம் செய்ய வேண்டும்? எத்தகைய நியமங்களுடன் ஜபம் செய்ய வேண்டும்? எவ்வளவு ஜபம் செய்ய வேண்டும்? என்று அந்தந்த ஜபத்திற்கான விதிகளில் சொல்லப்பட்டு இருக்கின்றதோ, அதன்படி ஜபம் செய்தால், அந்தந்த தேவதைகள், அருள் செய்துதான் ஆக வேண்டும். அந்த தேவதைகளால் மறுக்க முடியாது. ஆனால், பகவான் நாராயணனுக்கோ, அப்படி எதுவும் கட்டாயம் கிடையாது. நாம் என்ன செய்தாலும் அல்லது செய்யா விட்டாலும் கூட, அருள் புரிவது என்பது அவர் இஷ்டம். பகவான் சுதந்திரமானவர். இதுதான் தேவதைகளுக்கும் தெய்வத்திற்கும் உள்ள வித்தியாசம்.






# பாகவத பழம்

### ஸ்கந்தம் 2, அத்யாயம் 9

–ஸ்ரீ ஸ்வாமிஜி (26)

பரீக்ஷித்ராஜாவால், சபையில், இவ்விதம், சத்ய ஸ்வரூபியான பகவானைப் பற்றி கேட்கப்பட்ட ஸ்ரீசுகர், மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். பிரம்மகல்பத்தில் பகவானால் பிரம்மதேவருக்கு உபதேசிக்கப்பட்ட, வேதத்திற்கு ஒப்பான பாகவதம் என்று பிரஸித்தி பெற்ற புராணத்தை ஸ்ரீசுகர் உபதேசித்தார். பாண்டவ சிரேஷ்டரான பரீக்ஷித் என்னென்ன கேள்விகள் கேட்டாரோ, அவை அனைத்தையும் கிரமமாக சொல்ல ஆரம்பித்தார்.

### அத்யாயம் 9

"ராஜன்! மாயையைக் காட்டிலும் வேறுபட்ட ஞான ஸ்வரூபமான ஆத்மாவுக்கும் சரீரத்திற்கும் ஸம்பந்தம் என்பது ஸ்ரீஹரியின் மாயையினால் மட்டுமே ஏற்படுகின்றது.

உண்மையில் ஆத்மாவுக்கும், பார்க்கப்படும் திருஷ்ய வஸ்துவான சரீரத்திற்கும் சம்பந்தமில்லை. கனவில் காணும் பொருள்களுக்கும் உலகத்திற்கும் என்ன சம்பந்தமோ, அல்லது அதை காண்பவனுக்கும் என்ன சம்பந்தமோ, அந்த சம்பந்தம் தான் ஆத்மாவுக்கும் சரீரத்திற்கும்.

கனவில் ஒருவனுக்கு உடம்பில் ஒரு கீறல் விழுந்தால், அவன் விழித்த பின் அவன் உடலில் அது இருக்காதல்லவா? கனவில் ஒருவன் ஒரு மாளிகையில் வாழ்வதாக கண்டால், மறுநாள் அவன் அந்த மாளிகைக்குள் புகுந்துவிட முடியுமா? கனவும் உண்மையும் எவ்வளவு சம்பந்தமற்று இருக்கிறதோ, ஆத்மாவும் சரீரமும் அதுபோலவே சம்பந்தமற்று உள்ளன" என்று மிகவும் அழகான உதாரணத்துடன் விளக்குகிறார்.

இந்த மாயை பல ரூபமுடையதாக இருப்பதால் ஆத்மாவும் பலவிதமாக தோன்றுகிறது.

நாமரூபங்களுடைய இந்த பிரபஞ்சம் மாயையினால் தான் தோன்றுகிறது. மாயையில் மயங்கி விஷய போகங்களை அனுபவிப்பதால், 'நான்', 'எனது' என்ற சரீரத்தின்மீது மோஹத்தையடைகிறான். காலம், மாயை இவைகளுக்கு அப்பாற் -பட்ட ஆத்ம ஸ்வரூபத்தில் எப்பொழுது ஒருவன் ரமிக்கிறானோ, அப்பொழுது மோஹம் நீங்கி சரீரத்தில் 'நான்', 'எனது' போன்ற எண்ணங்களை ஒழித்து பரிபூரண ஸ்வரூபத்தில் நிலைத்திருக்கிறான். காலம், மாயை இவை இரண்டுமே நடைமுறைக்காக ஒப்புக்கொள்ளப் பட்டவையே! உண்மையில் காலம் என்றோ மாயை என்றோ ஒன்றும் இல்லை. அந்த ஆத்ம ஸ்வரூபம் மட்டுமே சத்யமான பொருள். கபடமில்லாமல் பக்குவத்துடன் ஆராதித்த பிரம்மதேவருக்கு பகவான் உண்மையான ஞானமயமான தனது ஸ்வரூபத்தை காண்பித்து உபதேசம் செய்தார். இந்த உபதேசமே ஜீவனுக்கு சுத்தியை தந்து ஆத்மஸ்வரூபத்தை உணர போதுமானது.'

பகவான் பிரம்மதேவருக்கு உபதேசித்து, பகவத் பிரஸாதத்தால் அவருக்கு ஞானம் உண்டானதையும், ஆதியில் பாகவதம் (நாராயணனால் பிரம்ம தேவருக்கு) உபதேசிக்கபட்ட கதையையும் கூற ஆரம்பிக்கின்றார் ஸ்ரீசுகர்.

முதல் தோன்றிய தேவரும், உலகத்தாருக்கு சிரேஷ்டமான குருவுமான அந்த பிரம்ம தேவர் தனது ஆஸனமான தாமரையில் அமர்ந்துகொண்டு இவ்வுலகங்களை சிருஷ்டிக்க விரும்பியவராய் எப்படி சிருஷ்டி செய்வது?' என்று ஆலோசிக்கலானார். எந்த ஞானத்தைக் கொண்டு இந்த சிருஷ்டியை செய்வது? என்று மிகவும் யோசித்தபோதும் அந்த ஞானத்தை அவர் அடையவில்லை.

*ஸ சிந்தயன் த்வயக்ஷர மேகதாம்பஸ்யுபாருணோத்*
*த்விர்கதிதம் வசோ விபு: |*
*ஸ்பர்ஸேஷு யத்ஷோடசமேகவிம்ஸம் நிஷ்கிஞ்சநாநாம்*
*ந்ருப யத்தனம் விது: || 2:9:6*

ராஜன்! இவ்வாறு சிருஷ்டி விஷயமாக அவர் மிகவும் ஆலோசித்தபோது அவர் காதுகளில் மெய் எழுத்துக்களில் பதினாறாவது மற்றும் இருபத்தோராவதான எழுத்துக்கள் இரண்டு தடவை ஒலித்தன.

(கனியும்)

# திருஅல்லிக்கேணி - ஸ்ரீபார்த்தசாரதி

திரு அல்லிக்கேணி என்றும், திருவல்லிக்கேணி என்றும் வழங்கப்படும் இந்த திவ்ய ஸ்தலம், சென்னை மாநகரத்தின் கடற்கரை ஓரமாய் உள்ளது. இப்பிரதேசம் துளசிச்செடிகள் அடர்ந்த காடாயிருந்தமையால், இதற்கு 'பிருந்தாரண்ய க்ஷேத்திரம்' அதாவது துளசி வனம் என பெயர் பெற்றது. இத்திவ்யதேசம் பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கை மன்னன் ஆகிய மூவராலும் மங்களாசாஸனம் செய்யப்பெற்று சிறப்பிக்கப்பட்ட க்ஷேத்திரமாகும். இங்கு ஐந்து மூர்த்திகள் கோயில் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே திருமங்கை மன்னன் மங்காளாசாஸனம் செய்திருக்கிறார்.

'மாடமாமயிலை திருவல்லிக்கேணி' என்று திருமங்கையாழ்வாரும், மாமயிலை திருவல்லிக்கேணி என்று திருமழிசைபிரானும் குறித்துள்ளதால், ஆதியில் இந்த ஊரும் மைலாப்பூரும் ஒன்று சேர்ந்து இருந்திருக்க வேண்டுமென தெரிகிறது. கோயில், கடற்கரைக்கு மேற்கே வெகு ரமணீயமாக அமைந்துள்ளது. கோயில் எதிரில் நீராழி மண்டபத்துடன், அழகான கைரவணி புஷ்கரணி இருக்கிறது. விசேஷமாக இதில் மீன்கள் வழிப்பதில்லை. இக்குளக்கரையில் ஒரு மகான் தவம் செய்து கொண்டிருந்தார். ஒரு மீன் துள்ளி குதித்து, அவர் தவத்தை கலைத்தது. உடனே கோபங்கொண்ட மகான், குளத்தில் மீன்களே இருக்கக்கூடாதென சாபமிட்டதாகவும், அதன் காரணமாக இக்குளத்தில் மீன்களே வசிப்பதில்லை என கூறப்படுகிறது. இப்புனிதமான புஷ்கரணியில் நமது கைகால்களை சுத்தி செய்து கொண்டு, கோயிலுக்குள் செல்லலாம்.

கோயிலின் முன்னுள்ள பெரிய மண்டபமும், ராஜ கோபுரமும், நம்மை உள்ளே அழைக்கின்றன. முகத்வார கோபுரம், புராண கதைகளை சித்தரிக்கும் பிம்பங்களுடன், ஐந்து அடுக்குகளுடனும், ஏழு கலசங்களுடனும், கம்பீரமாக காட்சி அளிக்கின்றது. உள்ளே சென்றவுடன், தங்கத்தகடுகளால் மூடப்பட்ட பலி பீடமும், த்வஜஸ்தம்பமும் அதற்கு மேற்கில்

பெரிய திருவடி (கருடன்) சன்னதியும் இருக்கின்றன. சமீபத்தில் த்வஜாரோகண மண்டபம் இருக்கிறது. பலிபீடத்தருகில் சாஷ்டாங்கமாக சேவித்து, பரிசுத்தனாகி தொண்டரடி பொடி வாசல் தாண்டி உள்ளே சென்றால், நேரே ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி காம்பீர்யமாக சேவை சாதிக்கின்றார். வழக்கமான அனுஷ்டானப்படியே, நாம் பார்த்தசாரதியை பிரதக்ஷிணமாக வெளிப்ரகாரத்தை சுற்றியே தரிசிப்போம். வெளிப்ரதக்ஷிணம் திரும்பியதும், வலது கைப்பக்கம் வெள்ளிக்கிழமை மண்டபம் என்னும் நான்கு கால் மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபத்தில்தான், ஸ்ரீவேதவல்லித்தாயார் ஊஞ்சல் கண்டருளுகிறார்.

இதை தாண்டி சென்றால், ஸ்ரீவேதவல்லித்தாயார் சன்னதி முக மண்டபத்துடன் காட்சி அளிக்கின்றது. இந்த சன்னதியில் சர்வ சௌந்தரியத்துடன், ஸ்ரீவேதவல்லித்தாயார் காட்சி அளிக்கிறார்.

ஸ்ரீலக்ஷ்மிதேவியானவள், ஒரு சிறு கலகம் காரணமாக ஸ்ரீமந்நாராயணனை பிரிந்து, இத்தலத்தில் குழந்தை வடிவோடு அல்லி மலரில் தோன்றினாள். அங்கே தவம் செய்து கொண்டிருந்த பிருகு முனிவர், இக்குழந்தையை எடுத்து வேதவல்லி என பெயரிட்டு வளர்த்து வந்தார் எனவும், திருமாலும் எம்பெருமானாக எழுந்தருளி வேதவல்லியை காதலித்து மணந்து கொண்டார் எனவும் கூறப்படுகிறது. இதை பேயாழ்வார் 'ஒரு வல்லித்தாமரையான் ஒன்றிய சீர்மார்பன் திருவல்லிக்கேணியான் சென்று' என கூறுகிறார். சௌந்தர்யவல்லியான ஸ்ரீவேதவல்லித்தாயாரையும், பின்புறம் உள்ள மூலவரையும் சேவித்து கொண்டு தெற்கிலிருக்கும் படிகள் வழியாக இறங்கி சென்றால், கருடாரூடராக ஸ்ரீகஜேந்திர வரதனை சேவிக்கலாம். 'ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்றாழி தொட்டானை' என்ற மங்களாசாசனத்திற்கேற்ப ஸ்ரீவரதனை சேவிக்கலாம்.

ஸ்ரீவரதனை சேவித்து கொண்டு, வலமாக வந்து திருமழிசை பிரானையும் சேவித்து கொண்டு, ஸ்ரீஅழகிய சிங்கரின் சன்னதியை அடையலாம். இங்கு ஸ்ரீஅழகிய சிங்கருக்கு தனியாகவே த்வஜாரோகண மண்டபம், கருடன் சன்னதி, த்வஜஸ்தம்பம், பலிபீடம், கல்யாண மண்டபம்

முதலியன உள்ளன. சன்னதியில், ஸ்ரீநரசிம்ம மூர்த்தி வீற்றிருக்கும் திருக்கோலத்தில், மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன், 'ஸ்ரீதெள்ளிய சிங்கர்' என்று மங்களாசாஸனம் செய்யப்பெற்ற ஸ்ரீயோகநரசிம்ம மூர்த்தி சேவை சாதிக்கிறார். அப்படியே பிரகாரத்தின் வடகோடியிலுள்ள ஸ்ரீஆண்டாள் சன்னதியையும், ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமியின் ஆனந்த விமானத்தையும் சேவித்து கொண்டு வலமாக வந்து, திருவாய்மொழி மண்டபத்தை அடையலாம்.

இந்த மண்டபத்தில்தான் சாதாரணமாக எல்லா உத்ஸவங்களும் நடைபெறும். இங்குள்ள கூரத்தாழ்வார், முதலியாண்டான், ஸ்ரீமணவாள மாமுனிகள், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீவேதாந்த தேசிகன், ஸ்ரீதிருக்கச்சி நம்பி முதலியவர்கள் இந்த மண்டபத்தில், தனித்தனி சன்னதிகளில் காட்சி அளிக்கின்றனர். ஆசிரியர்களுடைய அனுக்ரஹம் பெற்று துவாரபாலகர்களை தாண்டி உள்ளே சென்றால், நேரே ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் திவ்ய சேவை சாதிக்கிறார். வழியில் வலப்புறத்தில், ஸ்ரீமன்னாதனான ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீசக்கரவர்த்தி திருமகன் சன்னதிகளும் உள்ளன.

ஸ்ரீரங்கனாதன் சன்னதியில், வெகு கம்பீரமாய் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலத்துடன் ஆதிசேஷதல்பத்தில் சயனத்திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். ஸ்ரீமன்னாதனுக்கு பின்புறத்தில், ஸ்ரீதேவியும் பூதேவியும் வீற்றிருக்கின்றனர். மேலும் விசேஷமாக ஸ்ரீமன்னாதனின் தலைப்புறத்தில், ஸ்ரீயக்ஞவராஹ மூர்த்தியும் திருவடிபுறத்தில் உக்ரநரசிம்மரும், எழுந்தருளி இருப்பதை வெகு சிலரே அறிவர்.

ஆழ்வார்களின் மங்களசாஸனப்படி, பரதனும் தம்பி சத்ருக்னனும் இலக்குமணனோடும் மைதிலியோடும் ஸ்ரீசக்கரவர்த்தி திருமகன், தெற்கு திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கிறார். நேர் எதிரே, சிறிய திருவடி சன்னதியும் ஆழ்வார்கள் சன்னதிகளுமுள்ளன.

ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி மந்தஹாசத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கும் இந்த சேவை போல, எங்குமே கிடையாது என்று சொல்லலாம். இந்த த்ருவபேரமாக உத்தம தசலக்ஷணங்களுடன் விளங்கும், இந்த மூல மூர்த்திக்கு

ஸ்ரீவேங்கட கிருஷ்ணன் என பெயர். ஸுமதி மன்னரின் பிரார்த்தனைக்கிணங்கி, ஸ்ரீவேங்கடேசன் வேங்கட கிருஷ்ணனாக, அர்ஜுனனுக்கு சாரத்யம் செய்த அவசரத்தில், த்வி புஜத்துடன், வலது கையில் பாஞ்சசன்யத்தை ஏந்தியும், இடது கை வரத ஹஸ்தமாகவும், நின்ற திருக்கோலத்தில் வலதுபுறம் ஸ்ரீருக்மிணிபிராட்டியுடனும், பலராமருடனும் இடதுபுறத்தில் சாத்யகி, பிரத்யும்னன், அனிருத்தன் இவர்களுடன் குடும்பஸமேதராய் சேவை சாதிக்கிறார். இந்த மூர்த்தி, வியாசமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, பிறகு ஆத்ரேய முனிவருக்கருளப்பெற்று, கைரவணி தீரத்தில், ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் பூஜிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. மூலவரின் திருமேனியே, ஸ்ரீபகவத்கீதையின் ஸ்வரூபம் என பெரியோர்கள் கருதுகிறார்கள்.

உத்ஸ்வ மூர்த்தியான ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி உபய நாச்சியார்களுடன் பாணங்களால் ஏற்பட்ட வடு சின்னங்களுடன் புன்னகை தவழ, வெகு வசீகரமானத் திருமேனியுடன் சேவை சாதிக்கின்றார். மூலவரின் திருவடியருகில் நித்ய உற்சவர், பலி பேரம், ஸயந பேரம் ஆகிய மூன்று மூர்த்திகளும், நவநீத கண்ணனும், சுதர்சனமும், எழுந்தருளி இருக்கிறார்கள். கீதாசாரியாரான ஸ்ரீபார்த்தசாரதியின் திருவுருவம், நம்மை மறுபடியும் திரும்ப பார்க்க செய்கின்றது. அந்த சமயத்தில், திவ்ய மங்கள ரூபனாக காட்சி அளிக்கும் பார்த்தசாரதியின் கையிலுள்ள பாஞ்சசன்யத்திலிருந்து,

*சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ*
*அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி மாஸுச:*

என்ற ஸரம ஸ்லோகம் நமக்கு அபயம் தருகின்றது.

இந்த ஸ்தலத்தின் ஐந்து மூர்த்திகளும், ஆழ்வார்களால் பாடப்பெற்றவர்கள். இந்த திருப்பதி, பஞ்சமூர்த்தி ஸ்தலம் எனப்படும். இக்கோயிலில், மொத்தம் பன்னிரெண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள், நந்திவர்ம பல்லவன் கி.பி. 775-826 காலத்துக் கல்வெட்டு மிக பழமையானது. இதிலிருந்து, இக்கோயில் பல்லவர் காலத்திய பழமையுடையது என்பது விளங்குகிறது. இந்த ஆதாரத்திற்கு முத்திரை வைப்பது போல், திருமங்கை மன்னனும் பாசுரத்தில்

'தென்னவன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலை திருவல்லிக்கேணி நின்றானை' என்பதிலிருந்து பல்லவர் காலத்தில் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது நிச்சயமாகிறது. மற்ற கல்வெட்டுக்களிலிருந்து கி.பி.1564-65இல், சதாசிவராயர் காலத்தில், கோயில் திருப்பணி செய்யப்பட்டதாக தெரிகிறது. இன்னும் இக்கோயிலுக்கு புதுப்பாக்கம், வேப்பேரி, வியாசர்பாடி, செம்பியம் முதலிய ஊர்கள் தேவதானமாக விடப்பட்ட விபரமும் தெரிகிறது. கி.பி.1674இல் இந்த பிரதேசமும் கோயிலும், டச்சுக்காரர்கள் வசமிருந்ததாகவும், அவர்கள் கோயிலை சுற்றி பீரங்கிகளுக்காக ராணுவ பாதுகாப்புக் கட்டிடங்களை கட்டியதாகவும் தெரிய வருகிறது. 1746இல் கர்நாடக யுத்தத்தில், இந்த இடமும் கோயிலும் தாக்கப்பட்டதாகவும் பிறகு கும்பினியாரால் விடுவிக்கப்பட்டதாகவும், கடைசியாக 1754இல் ஆங்கிலேயர்கள் வசம் இந்த இடம் வந்தபிறகுதான், அமைதி ஏற்பட்டதாகவும் சரித்திர வரலாறு கூறுகிறது.

இந்த திவ்ய க்ஷேத்திரத்தில், வருஷம் முழுவதும் உத்ஸவம் நடைபெறுகிறது. அவற்றுள் முக்கியமானது சித்திரை மாதம் ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமிக்கு ப்ரஹ்மோத்ஸவமும், வைகாசியில் வசந்தோத்ஸவமும், அதுபோல் வரதராஜ பெருமாளுக்கு வைகாசியில் 10நாட்கள் உத்ஸவமும், ஆனி மாதத்தில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமிக்கு 10நாட்கள் உத்ஸவமும், புரட்டாசி மாதம் ஸ்ரீவேதவல்லி தாயாருக்கு நவராத்திரி உற்சவமும், மாசி மாதத்தில் 7நாட்கள் தெப்ப உத்ஸவமும், (பார்த்தசாரதிக்கு 3நாளும் நரசிம்மஸ்வாமி, ராமர், வரதர், ரெங்கநாதர் இவர்களுக்கு ஒவ்வொரு நாளும்) பங்குனியில் ஸ்ரீராமருக்கு ராமநவமி உத்ஸவமும், அதே மாதத்தில் ஸ்ரீரங்கநாதனுக்கு பல்லவ உத்ஸவமும் விமரிசையாக நடைபெறுகிறது.

ஐந்து மூர்த்திகள் ஒன்று கூடியிருக்கும் இந்த ஸ்தலம் மிக சிலாக்கியமானது. மேலும், ஸ்ரீவேங்கடேசனும், ஸ்ரீகிருஷ்ணனுமாகிய இரண்டு திவ்யமூர்த்திகள் ஒன்று திரண்டு ஓர் உருவாய், ஸ்ரீவேங்கடகிருஷ்ணன் என்ற திருநாமத்துடன் திகழும் இந்த க்ஷேத்திரம் எல்லோரும் அவசியம் சென்று சேவிக்கவேண்டிய புனித ஸ்தலமாகும்.

## Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

# வீடு தேடி வருவான் விட்டலன் – 17

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

## ஸ்ரீஞானேஸ்வரர்-6

குருவின் வாக்கை மெய்ப்பிப்பதற்காக, விட்டல்பந்த் மறுபடி குடும்பம் நடத்தினார். ஒரு ஆச்சரியம். முதலில் பாண்டுரங்கன் திருமணம் செய்து வைத்தான். குழந்தை பிறக்கவில்லை. அதன்பின், சன்யாசம் மேற்கொண்டு, 12 வருடங்கள் கடுமையாக தவமும், குரு சேவையும் செய்தார். அதே சமயம் ருக்மிணியும் தவவாழ்க்கை மேற்கொண்டு இருந்தாள். குரு சொல்லை காப்பாற்ற மறுபடி, விட்டல்பந்த் கிருஹஸ்தன் ஆனார்.

இப்பொழுது அவருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. நான்கு குழந்தைகளும் இரண்டு, இரண்டு வருட இடைவெளியில் பிறந்தன. முதலில் பிறந்தவர் நிவ்ருத்தி தேவர். இவர் சாக்ஷாத் கைலாஸபதியான பரமேஸ்வரனின் அம்சமாக பிறந்தவர். இவர் பிறந்த வருடம் 1267.

ஒரே காலத்தில் இரு திசைகளில் நடக்க முடியாது. கிழக்கு திக்கு நோக்கி நடப்பவன் மேற்கிலிருந்து விலகுகிறான். மேற்கு நோக்கி நடப்பவன் கிழக்கிலிருந்து விலகுகிறான். அதுபோலவே ஒருவன் உலக வாழ்க்கையில் ஈடுபட்டால் அவன் ஆன்மீக வாழ்க்கையில் இருந்து விலகுகிறான். ஆன்மீகத்தில் ஈடுபாடு கொள்பவனின் மனதில் இருந்து உலக ஆசைகள் கொஞ்சம் கொஞ்சமாக விலகுகின்றன. உலகில் ஈடுபட்டு காரியம் செய்வதற்கு ப்ரவ்ருத்தி என்று பெயர். பகவானை அடைய பாடுபடும் வழிக்கு நிவ்ருத்தி மார்க்கம் என்று பெயர். அதற்கு வைராக்யமும், ஞானமும், பக்தியும் தேவை. இந்த நிவ்ருத்தி தேவர் அத்தகைய வைராக்யத்துடனேயே பிறந்தவர். பரமசிவன் யோகத்திற்கு குரு ஆவார். அதனால் தான் சிவ யோகி என்கின்றனர். ஹரிபக்தன் என்பர். நிவ்ருத்தி நாதர் யோகீஸ்வரர் ஆகப் போவதால் அவருக்கு அந்த பெயர் வந்தது.

பரமசிவன் பரம விரக்தராக இருக்கிறார். அவர் பக்தர்களும் அப்படியே. எல்லோரும் எந்த எந்த பொருட்களை

வேண்டாம் என்று உதாசீனத்துடன் விலக்குகிறார்களோ, அந்த அந்த பொருட்களை தான் விரும்பி ஏற்றுக் கொள்கிறார். அத்தகைய தியாக புத்தி அவருடையது.

மனிதன் சந்தனம், வாசனை திரவியங்கள், சுகந்தங்களை தடவிக் கொள்ள விரும்புவான். அவைதான் மணக்கும். ஆனால் பரமசிவனோ, சுடுகாட்டு சாம்பலை தடவிக் கொண்டு, பஸ்மோத்தூளித விக்ரஹனாக, உடல் முழுவதும் நீறணிந்து காட்சி அளிக்கிறான். சாதாரணமாக ரோஜா மாலை, மல்லி மாலை போன்ற மாலைகளைத்தான் விரும்பி அணிவார்கள். அவற்றில் இருந்து வரும் சுகந்தம் மிக ரம்யமாக இருக்கும். வாசனையுள்ள புஷ்பங்களைத்தான் மாலையாக தொடுத்து ஸ்வாமிக்கு போடுவார்கள். பரமேஸ்வரனோ ஊமத்தம்பூ, எருக்கம்பூ, தும்பைப்பூ, கொன்றைப்பூ போன்றவற்றைத்தான் விரும்பி அணிகின்றார். உன்மத்தம்பூ என்பதுதான், மருவி ஊமத்தம்பூ என்றாகி விட்டது. உன்மத்தம் என்றால் பைத்தியம் என்று அர்த்தம். ஊமத்தங்காயை சாப்பிட்டால் பைத்தியம் பிடித்துவிடும். யாருக்கும் பிடிக்காத இந்த பூ அவருக்கு உகந்தது.

தும்பைப்பூ பார்ப்பதற்கு, வெள்ளையாக இருக்கும். சிறிதாக இருக்கும். இதைக்கொண்டு, பகவானுக்கு மாலை சமர்ப்பித்தால், நமது துன்பங்கள் எல்லாம் விலகி விடும். பழங்காலத்தில் கிராமங்களில் சிவலிங்கத்தை வைத்து அருகில் கொன்றை மரம் வைத்து விடுவார்கள். அதனுடைய சீசனில் அதில் இலையே இருக்காது. காற்றில் அசைந்து அசைந்து அந்த கொன்றை புஷ்பங்கள் அப்படியே லிங்கத்தின் மேல் அழகாக விழுந்து கொண்டே இருக்கும். மாலை தான் இப்படி போடுகிறாரே, நல்ல வஸ்திரம் ஏதாவது பட்டு வேஷ்டி போன்று கட்டி கொள்ளலாமே என்றால், பரமேஸ்வரன் தரிப்பதோ புலித்தோல்தான். அதுதான் அவருடைய ஆடை. திருநீறுதான் வாசனா திரவியம். ஊமத்தம்பூ, எருக்கம்பூ, போன்றவைதான் மாலை. புலித்தோல்தான் ஆடை. சரி இப்படி இருக்கிறார். கொஞ்சம் நகையாவது அழகாக போட்டுக் கொள்ளலாமே என்று பார்த்தால், அவருக்கு நகை என்பதை பார்த்தால் பயம்தான் வரும்.

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

4

- ஜனனி

சனாதனர், கௌர்-கௌர் என்று, ப்ரபுவின் நாமங்களை சொல்லிக்கொண்டே, காலில் கல்லும் முள்ளும் குத்துவது கூட தெரியாமல், வேக வேகமாக மேற்கு திசையை நோக்கி ப்ரபுவை காண வேண்டும் என்று ஓடினார். வழியில் பாத்டா என்றொரு மலை இருந்தது. அங்கு, ஒரு கொள்ளை கூட்ட தலைவன் இருந்தான். அவன் ஒரு ஜோதிடரை கொண்டு வழிப்போக்கர்களிடம் என்ன பணம் ,நகைகள் உள்ளது என்பதை தெரிந்து கொண்டு அவர்களை சூறையாடுவான். சனாதனருடன் வந்து கொண்டிருந்த ஈசானர், ஆபத்தில் உதவும் என்று எட்டு தங்க காசுகளை எடுத்து வந்திருந்தார். இதை ஜோதிடர் மூலம் அறிந்த அந்த கொள்ளை கூட்ட தலைவன் அவர்களை வழிமறித்தான். சனாதனருக்கு ஈசானர் காசு கொண்டு வந்திருப்பது தெரியாது. அந்த கள்ளக்கூட்ட தலைவன், அவர்களை நன்கு உபசரித்தான்.

இதை கண்டு வியந்து சனாதனர் ஈசானரிடம், ""ஈசான், நீ ஏதாவது பணம் வைத்து கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்.

"ஏழு பொற்காசுகள் வைத்துள்ளேன்".

"அடடா! என்ன பேராசை! உடனே அதை இந்த கள்வர்களிடம் கொடுத்து விடு" என்று சனாதனர் ஆணையிட்டார்.

அப்பொழுது அந்த தலைவன் மேலும் ஒரு பொற்காசு ஒளித்து வைத்திருப்பதாக கூற, ஈசானர் வெட்கத்துடன் அதை அவனிடம் தந்தார். ஆனால் அவரது இந்த செய்கையால், சனாதனர் அவரை நிச்சயமாக, தன்னை பின் தொடரவே கூடாது என்று ஆணையிட்டார்.

இதற்கு மேல், சனாதனர் தனியாகவே பயணித்தார். கல்லும் முள்ளும் நிறைந்த மலையை கடந்து ஹாஜிபுர் எனும் ஊரை அடைந்தார். அங்கு தனது உறவினரான ஸ்ரீகாந்த் என்பவரை தற்செயலாக பார்த்தார். எவ்வளவு வற்புறுத்தியும் ஸனாதனர் ஸ்ரீகாந்திடமிருந்து பணம் காசு எதையும் ஏற்க

மறுத்தார். மிகுந்த வற்புறுத்தலின் பெயரில் ஒரே ஒரு ஷால்வையை மட்டும் ஏற்றார்.

அவருடைய உடையும் தோற்றமும் ஒரு இஸ்லாமிய பகீரை போலிருந்தது. வழியில் பிக்ஷை எடுத்துக்கொண்டும் ப்ரபுவின் நாமங்களை கூறிக்கொண்டும் இவர் காசியை அடைந்தார். அங்கு சந்த்ரசேகர் என்பவரின் வீட்டில்தான் ப்ரபு இருக்கிறார் என்பதையறிந்து அங்கு விரைந்தார். வீட்டிற்குள் இருந்துகொண்டே மஹாப்ரபு சந்த்ரசேகரிடம், "சந்த்ரசேகர! வெளியே ஒரு வைஷ்ணவ ஸாது அமர்ந்திருக்கிறார். அவரை உள்ளே அழைத்து வா" என்றார். வெளியே சென்று திரும்பிய சந்த்ரசேகரர் அங்கே வைஷ்ணவ ஸாது யாருமில்லை என்று ப்ரபுவிடம் கூறினார். ப்ரபு அவரை மீண்டும் அனுப்ப, சந்த்ரசேகரர் திரும்பி, "ப்ரபு! அங்கு வைஷ்ணவ ஸாது யாரும் இல்லை. ஒரு இஸ்லாமிய பகீர்தான் இருக்கிறார்" என்றார்.

ப்ரபு சிரித்துக் கொண்டே, "இஸ்லாமியர் என்று நீ யாரை கூறுகிறாயோ, அவரே பரம பாகவதர், பரம வைஷ்ணவர். அவரை என்னிடம் அழைத்து வா" என்று ஆக்ஞாபித்தார். உள்ளே வந்த ஸனாதனர் தூரத்திலிருந்தே ப்ரபுவை ஸாஷ்டாங்கமாக ஸேவித்தார். ப்ரபு ஓடி வந்து அவரை ஆலிங்கனம் செய்து கொண்டார். ஸனாதனர் தன்னை பின்னால் விலக்கிக் கொண்டு, "ப்ரபு! என்னை தொடாதீர்கள்! தங்கள் ஸ்பரிசத்திற்கு யோக்யமுள்ளவன் இல்லை நான்" என்றார். ஆனால் அதை மீறி ப்ரபு அவரை ஆலிங்கனம் செய்து கொண்டே, "இன்று நான் பாவனமானேன். ஸனாதனருடைய ஸ்பரிசம் கிட்டிய நான் தன்யனானேன். பாபிகள் கூட இவரின் ஸ்பரிசம் பெற்றால் க்ருஷ்ண ப்ரேமையை அடைவார்கள் அன்றோ!" என்று கூறினார். மேலும் ரூபரும், அனூபும் தன்னை ப்ரயாகையில் சந்தித்த பின் ப்ருந்தாவனம் சென்றிருப்பதாக தெரிவித்த ப்ரபு, "நீ இங்கு என்னுடனே சில காலம் தங்கு" என்று கூறினார். ஸ்ரீரூபர் மற்றும் ஸனாதனர், இருவரின் செயல்களாலேயே அவர்கள் தீவிர வைராக்கியம் பொருந்தியவர்கள் என்று ப்ரபு புரிந்து கொண்டார். முதலில் எத்தனைக்கெத்தனை போகிகளாக இச்சகோதரர்கள் இருந்தார்களோ, பின்பு அத்தனைக்கத்தனை த்யாகமயமான ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தார்கள்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## கா.. கா.. கா!

காகம் ஒன்று காட்டின் நடுவே நிம்மதியாக வாழ்ந்து வந்தது. அது சுதந்திரமாக பறந்து, சுற்றத்தாருடன் தன் வாழ்க்கையை கழித்து வந்தது. அது "கா கா" என இரைந்து கூவும். அதற்கு மனதில் தான் மிகவும் கறுப்பு என ஏக்கம் இருந்தது. அது கா கா என கூவுகையில் எல்லாம், "கார்முகில்வண்ணா! கருமையாக படைத்ததேனோ?" என கேட்பதை போல் இருக்கும். அது ஒருநாள் ஒரு அழகான அன்னப்பறவையை கண்டது. அன்னம் மிகவும் வெள்ளையாக இருப்பதை பார்த்து, காக்கை மனதில் வருத்தம் உண்டாயிற்று. "என்னை போல் யாரும் கறுப்பாக இல்லை. இந்த அன்னம் போல வெள்ளையாக இருப்பவர் இல்லை. இந்த அன்னம்தான் உலகிலேயே மிக மகிழ்ச்சியாக இருக்கும்" என நினைத்தது. அது அப்படியே அன்னத்திடம் சென்று, தான் நினைத்ததை சொன்னது.

அன்னம் உடனே, "நண்பா! நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன். ஒருநாள் கிளி ஒன்றை பார்த்தேன். அதற்கு இரண்டு அழகான வர்ணங்கள் உடலில் உண்டு. அதுதான் மிக சந்தோஷமான பறவையாக இருக்க வேண்டும் என்று எனக்கு தோன்றியது" என்றது. காக்கையின் ஆவல் மேலும் தூண்டப்பட்டது. அது கிளியை தேடி பறந்து சென்று அன்னம் சொன்னதை சொன்னது.

கிளி காக்கையை பார்த்து, "நண்பா! நான் மிக சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். என்ன ஒரு அருமையான வாழ்க்கை தெரியுமா? ஆனால் ஒருநாள் நான் மயில் ஒன்றை கண்டேன். அதன் உடல் முழுவதும், அழகிய வர்ணங்கள். அதன் இறக்கையை பார்! என்ன அழகு! அதற்கு நீண்ட அழகிய கழுத்து. அதிலிருந்து, என்னை விட அதுவே மிக

ஆனந்தமாக வாழ்கிறது என புரிந்து கொண்டேன்" என்றது.

காக்கை உடனே பறந்து போய், ஒரு மிருக காட்சி சாலையில் மயில் ஒன்றை பார்த்தது. மயிலின் அழகை பார்க்க அங்கு ஏராளமானோர் கூடி இருந்தனர். அவர்கள் எல்லாம் சென்ற பின், மயிலை காகம் நெருங்கி, கிளி சொன்னதை சொன்னது. "மயிலே உன் அழகுதான் என்ன? உன்னை பார்க்க எத்தனை மனிதர்கள் தினம் தினம் வருகின்றனர்? நானோ ஒரே கறுப்பு. எனக்கு அழகும் இல்லை. என்னை பார்த்தாலே "போ போ" என விரட்டி விடுகின்றனர். உன்னை போல் ஆனந்தமான வாழ்வு யாருக்கு இருக்கிறது?" என்றது.

மயில் சொன்னது, "உன்னை பற்றி உனக்கு தெரியவில்லை. நான் அழகு என்பது ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால் அப்படி அழகாக இருப்பதால் அல்லவோ, என்னை இப்படி மிருக காட்சி சாலையில் அடைத்து உள்ளனர்? இந்த காட்சி சாலையில் உள்ள ஒவ்வொரு இடமும், எனக்கு நன்கு தெரியும். ஒரு இடத்திலும் ஒரு கூண்டில் கூட காகம் கிடையாது. ஆக உனக்கு இருக்கும் சுதந்திரம் என்பது எனக்கு கிடையாது. நானே சில நாட்களாக, என்ன நினைத்து கொண்டிருக்கிறேன் என்றால், ஒருக்கால் நான் காகமாக இருந்தால் சுதந்திரமாக பறந்து திரிந்து வருவேனே!" என்று தன் வருத்தத்தை தெரிவித்தது.

அதைக்கேட்ட காகம் "கா.. கா.. கா" என சப்தம் போட்டு கொண்டே அங்கும் இங்குமாக பறந்தது. அதன் செய்கையை பார்த்தால், "கருமை நிற கண்ணனின் காரியம் அனைத்தும் கச்சிதம்" என்று சொல்வது போலிருந்தது.

இப்படித்தான், நாமெல்லோரும் உலகில் வாழ்கிறோம். நாம் பிறருடன் நம்மை ஒப்பிட்டு பார்த்து மனக்கவலைக்கு உள்ளாகிறோம். இறைவன் நமக்கு தந்துள்ளதை பார்ப்பதில்லை. மாறாக நம்மிடம் இல்லாததை நினைத்து வருத்தப்படுகிறோம். அது தேவையற்றது. இறைவனின் சிருஷ்டியில், யாரோ ஒருவரிடம், நம்மிடம் உள்ளதை விட, அதிகமாகவோ குறைவாகவோ இருந்தே தீரும். தம்மிடம் இருப்பதை கொண்டு வாழ்பவரல்லவா, வாழ்க்கையில் மிகவும் செழிப்பவர் ஆவார்!

**ஜுன் 3** கடலூர் அருகே மதிகிருஷ்ணாபுரத்தில் ஸ்ரீபட்டாபிராமர் கோவில் கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**ஜுன் 4** சென்னை நாரத கான சபாவில், காஞ்சி ஸ்ரீமஹாஸ்வாமிகளின் ஜயந்தியன்று பம்மல் ஸ்ரீ ஏகாம்பரம் அவர்கள் எழுதிய, "மஹாபெரியவாளும் ஏகாம்பரம் ஆகிய நானும்" நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வெளியிட்டார்கள்.

**ஜுன் 12** சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் கோவில் சம்ப்ரோக்ஷணம், மிக சிறப்பாக நடைபெற்றது. இது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி ஸ்ரீஜய ஹனுமான் அறக்கட்டளையின் சார்பில், சிங்கப்பூரை சேர்ந்த ஸ்ரீஜெயச்சந்திரன் & ஸ்ரீஹரிலக்ஷ்மி ஜெயச்சந்திரன் தம்பதியினரால் மிக அழகாக புனரமைக்கப்பட்டது.

**ஜுன் 12** மாலை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு துவக்கி வைக்க ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் ஆண்டு விழா விவேகானந்தா பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. இதில் குழந்தை தொழிலாளர்கள் படும் துன்பத்தை காட்டும் ஒரு நாடகமும், டார்வின் தியரியும் தசாவதாரமும் ஒத்துப்போகும் இடங்களையும் தனியே குழந்தைகள் அழகாக சித்தரித்து காட்டினர். மேலும் பல பாட்டு மற்றும் நாட்டிய, கலைநிகழ்ச்சிகள் குழந்தைகளால் நிகழ்த்தப்பட்டன. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பூர்த்தியில் நாமத்வார் நன்கு நடைபெற செயலாற்றும் அன்பர்களையும் வந்திருந்தோரையும் ஊக்குவித்து பேசி, கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசுகளையும் வழங்கி அருளினார்கள்.

**ஜுன் 20** அம்பாசமுத்திரம் நாமத்வாரின் ஆண்டு விழா, மிக சிறப்பாக அம்பையில் நடைபெற்றது. அம்பை அன்பர்களின் நல்முயற்சியில், பல குழந்தைகள் மிக அருமையான பல நாடக, நாட்டிய, பாட்டு கலைநிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். சென்னையிலிருந்து ராமச்சந்திரன்ஜி மற்றும் வசந்த்ஜி கலந்து கொண்டனர்.

**ஜுன் 13** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி **G.O.D** இந்தியா டிரஸ்ட் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு

உயர்கல்விக்கான வழிகாட்டி Career Guidance Workshop 'UDYOG' for school students நிகழ்ச்சி ஜி.ஆர்.டி செண்டர் ,தியாகராய நகரில் நடைபெற்றது. Mrs Vasanthi Babu, Counselor and Therapist; Ms Brindaa Lakshmi, Journalist; Dr Rooban, Doctor and Academician; Mr Pattabhi Ram, Chartered Accountant and Author; Dr Pankaja, Principal and HOD Sanskrit and Vaishnavism ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்கள் மேல்கல்விக்கு எடுத்து கொள்ளத்தக்கதான, பலவித மிக பயனுள்ள படிப்புகளையும் அறிவுரைகளையும் வழங்கினர். மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகங்கள் இதில் மிக ஆர்வமுடன் கலந்து கொண்டதை பார்க்க முடிந்தது.

**அமெரிக்காவில் சத்சங்கங்கள்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் பூர்ணிமாஜி தொடர்ந்து சத்சங்கங்களை அமெரிக்காவில் நிகழ்த்தி இந்தியா திரும்பினார். மே 23 வரை குசேலர் சரித்திரம், அம்பரீஷ உபாக்யானம் உட்பட பல பாகவத சரித்ரங்களை அன்பர்களின் இல்லங்களில் எடுத்துரைத்தார். மே 24 அன்று, பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நேபாள நாட்டு மக்களுக்காக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய விசேஷ ப்ரார்த்தனையுடன் கூடிய, ஒரு சிறப்பு மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நடைபெற்றது. இது டெக்சாஸிலுள்ள நேபாள கலாசார மற்றும் ஆன்மீக மையத்தில், G.O.D டல்லஸ் மற்றும் டெக்சாஸ் நேபாளி சொஸைட்டி NST சார்பாக நடைபெற்றது. இதில் அஞ்சலியாக மரக்கன்றுகளை அன்பர்கள் நட்டனர். ஸ்ரீபுவன் ஆச்சார்யா N S T அமைப்பின் தலைவர் பிரார்த்தனையை துவக்கி வைத்தார். பூர்ணிமாஜி நிகழ்த்திய இந்த ப்ரார்த்தனையில், அன்பர்களால் மையம் நிறைந்திருந்தது. மே 25லிருந்து 31 வரை, ராமாயண ரத்தினங்கள் என்ற தலைப்பில் ராமாயண உதயம், சபரி மோக்ஷம், விபீஷண சரணாகதி, சுந்தர காண்டம் குறித்து பூர்ணிமாஜி DFW temple - Ektha mandirஇல் பேசினார். ஜூன் 5லிருந்து 7ஆம் தேதி வரை ஹூஸ்டனில் பல இடங்களில் ப்ரஹலாத, வாமன சரித்திரங்களையும் நாம மஹிமையையும் எடுத்துரைத்தார்.

ஜூன் 20-25 - சென்னை நங்கநல்லூர் ரஞ்சனி ஹாலில் G.O.D இந்தியா டிரஸ்ட் சார்பாக, ஸ்ரீமதி கிருத்திகா பரத்வாஜ் பக்த விஜயம் உபன்யாசம் செய்தார்.

## சனாதனப்புதிர் பகுதி 75- கேள்விகள் - ஆத்ரேயன்

1. பீஷ்மரால் அமைக்கப்பட்ட வியூகத்தை பார்த்து கவலையுற்ற யுதிஷ்டிரர் அர்ஜுனனை பார்த்து, இவ்வளவு பெரிய சேனையுடன் போரிட்டு எப்படி வெல்வோம் என கேட்க, அதற்கு அர்ஜுனனின் பதில் என்ன?
2. மஹாபாரத போருக்கு முன்பாக ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனை யாரை துதிக்கும்படி கூறினார்?
3. அர்ஜுனன் எத்தனை ஸ்லோகங்களால் துர்கையை துதித்தான்?
4. அர்ஜுனன் துதித்த துர்கா ஸ்லோகங்களால் என்ன பலன் ஏற்படுகிறது?
5. எப்பொழுது மனிதனுக்கு மறுபிறவி ஏற்படுவது இல்லை?
6. கீதையில் யார் யார் எத்தனை ஸ்லோகங்கள் சொல்கிறார்கள்?
7. யுத்த பூமியில் யுதிஷ்டிரர் துரோணாச்சாரியாரின் ஆசீர்வாதத்தை நாடுதல் - கௌரவர்களை வெல்வதற்கான வழிகளை கோரும்போது துரோணர் என்ன சொல்கிறார்?
8. மஹாபாரத போரில் கௌரவ சேனையில் இருந்து பாண்டவ சேனைக்கு வந்தது யார்?
9. விராடராஜாவின் புதல்வனான உத்திரனை முதல் நாள் போரில் கொன்றது யார்?
10. தனது சகோதரனான உத்திரன் கொல்லப்படுவதை பார்த்து வெகுண்டு எழுந்து கௌரவ சேனையை கலக்கியது யார்?


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஸுபலதாஸ் பாபாஜி-1

மனிதர்கள் மற்ற மனிதர்கள் மரணமடைவதை பார்க்கிறார்கள். எத்தனையோ முறை சொந்தபந்தங்களையே தோளில் சுமந்து சென்று தீக்கிரையாக்கிவிட்டு திரும்புகிறார்கள். அச்சமயங்களில், சிறிது நேரத்திற்கு மோஹம் விலகுவதுபோல் இருக்கும். ராம நாமமே மெய்யானது என்று உறக்க கூவுவார்கள். (வடமாநிலங்களில் மரணமடைந்த ஒருவரின் உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்கையில், "ராம நாம் ஸத்யஹை" என்று கூறிக்கொண்டே எடுத்துச் செல்வார்கள்). அப்பொழுது மற்றவை எல்லாம் பொய்யே என்ற தெளிவு ஏற்படுகிறது. மயானத்தில் தீக்கு இரையாகும் உடலைக் கண்டு, "எனக்கும் ஒரு நாள் இதே கதிதான். எந்த உடலை நான் என்று எண்ணி, அதை போஷிப்பதையே வாழ்க்கையில் குறிக்கோளாக கொண்டு வாழ்ந்தேனோ, அந்த உடலே ஒரு பொய். இன்று இருக்கிறது, நாளை இல்லை. இந்த உடலை பராமரித்துக் கொண்டிருப்பதென்பது, விழலுக்கிரைக்கும் நீர் போன்றதே. இனி இதில் மனதை செலுத்தாமல், அந்த பகவானின் ஸேவையே நான் செய்வேன். அதுவே நித்யம், ஸத்யம், மற்றும் அளவில்லா ஆனந்தம் மற்றும் சாந்திக்கும் வழியாகும்" என்றெல்லாம் எண்ணங்கள் உதிக்கும். ஆனால், வீட்டிற்குள் நுழைந்தவுடன் மாயை அப்படியே மூடி கொள்கிறது. பிறகு முன்பு போல் உடலைப் பற்றிய கவலையே மேலாக ஆகி விடுகிறது.

ஆனால் வங்காளத்தின் பாவனா ஜில்லாவிலுள்ள கோவிந்தபுரம் எனும் க்ராமத்தில் பிறந்த ஸ்ரீஸுபலதாஸ் பாபாஜி, தனது 17ஆம் வயதில், கர்ப்பிணியான தனது தாயை மயானத்தில் வைத்துவிட்டு, வீடு திரும்பவில்லை! அவருள் வைராக்ய அக்னியானது முன்பே, ப்ரபு ஜகத்பந்து என்ற ஸாதுவின் ஸங்கத்தால் தூண்டப்பட்டிருந்தது. தாயின் மரணத்திற்குப் பின்பு, அது கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது. இதனால் மாயை எனும் பேயால், அவர் அருகில் கூட அண்டமுடியவில்லை. தன்னை ப்ரபுவின்

சரணங்களில் பூர்ணமாக ஸமர்ப்பித்து கொள்வது என்று தீர்மானித்துவிட்டார். ஜகத்பந்து ப்ரபுவினுடைய ஏகாந்த பஜனை எனும் நியமம், அவரை வெகுவாக கவர்ந்தது. அவரை போன்றே தானும், தன்னையும் ப்ரபுவையும் தவிர யாருமே இல்லாத ஒரு குடிலில், ஏகாந்தமாக கதவுகளை மூடிக்கொண்டு பகவத் ஸ்மரணம் மற்றும் த்யானத்திலேயே, தனது வாழ்நாள் முழுவதையும் செலவழிப்பது என்று முடிவு செய்துவிட்டார். அப்படி ஒரு குடிலை தேடலானார்.

கோவிந்தபுரத்திலிருந்து சற்று தொலைவில், ஸாகரகந்தி எனும் க்ராமத்தில், ஸ்ரீஅனாதிக்ருஷ்ண தத்தர் என்றொரு பக்தர் இருந்தார். அவரிடம் சென்று, தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார். அவரும், தனது இல்லத்திலேயே ஒரு சிறு அறையை அளித்தார். அதற்குள் கதவை அடைத்துக் கொண்டு எப்பொழுதும் உரக்க நாம கீர்த்தனம் செய்யலானார் ஸுபலதாஸர். திரு.அனாதிக்ருஷ்ண தத்தரின் மனைவி இவரை புத்திரனாக பாவித்து, அவரை எல்லாவிதத்திலும் கவனித்துக் கொண்டாள். இரண்டு வருடகாலம் இங்கு தங்கினார் ஸ்ரீஸுபலதாஸர். இதற்கிடையில், நவத்வீபம் சென்று ஸித்த ஸ்ரீசைதன்யதாஸ் பாபாவின் சிஷ்யரான ஸ்ரீக்ருஷ்ணதாஸ் பாபாவிடமிருந்து, மந்திர தீக்ஷை பெற்றார். தீக்ஷை பெற்று சுமார் ஒரு வருடகாலத்திற்கு பின், தனது 150வது வயதில் ஸ்ரீக்ருஷ்ணதாஸ் பாபா ஸித்தியடைந்தார். ஸித்தியடையும் முன் அவர் ஸுபலதாஸரிடம், "நீ ப்ருந்தாவனம் சென்று விடு. உன் பஜனை அங்குதான் பூர்த்தியடையும்" என்று கூறினார்.

அதனால் ஸுபலதாஸர் ப்ருந்தாவனம் சென்றுவிட்டார். குருதேவருடைய கௌபீனம் மற்றும் (அரைஞாண்) கயிற்றையும் தன்னுடன் எடுத்துச் சென்றார். ப்ருந்தாவனத்தில் காளீயதாஹிலிருந்த ஸ்ரீப்ராணக்ருஷ்ணதாஸ் பாபாவை தரிசனம் செய்தார். அவரால் ஈர்க்கப்பட்டு, அவரிடம் தனக்கு ஸன்யாஸம் அளிக்கும்படி ப்ரார்த்தித்தார். ஆனால் அவரோ, "உனக்கு குருநாதரின் கௌபீனமும் கயிறும் கிடைத்துள்ளது என்பதால், உனக்கு ஸந்யாஸம் கிடைத்துவிட்டது என்றே பொருள். அதை உடுத்திக் கொள். அதுவே போதும்" என்று கூறிவிட்டார். அவர் கூறியபடியே செய்த போதிலும், ப்ராணக்ருஷ்ண தாஸரிடம், தான் ஸந்யாஸம் பெற்றுக் கொண்டதாகவே கருதினார் ஸுபலதாஸர். (தொடரும்)

# Spend Rs. 7/-* a day and protect your entire family with Swastham Health Card!!!



**Subscribe to Swastham Health Card for a period of 1 year and avail discounts ranging from 5 – 40 % at our affiliated healthcare providers.**

## FEATURES

- Swastham Health Card is not an insurance plan
- No age limit to use this card
- No restriction on pre-existing illnesses
- Caters to medical and non – medical expenses
- Unlimited benefits from a single card for the whole family
- No additional processing time for use
- Quality services from all providers at your convenience

**To know more details call 9092 800 900, Monday to Sunday, 9 am to 9 pm**

**Visit us at www.swasthamhealthservices.com**

Swastham Health Services Pvt Ltd

II Floor, 29 A, ARK Colony, Eldams Road, Alwarpet, Chennai – 600 018

## மதுரமுரளி வருட சந்தா

தாங்கள் 20வருடங்களாக மதுரமுரளிக்கு அளித்து வரும் பேராதரவிற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி. மதுரமுரளி பொலிவு பெற்று 21ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்க போகின்றது. அச்சு, காகித, தபால்செலவுகள் 10வருடங்களில் பன்மடங்காக உயர்ந்ததினால் மதுரமுரளி தனிப்பிரதியின் விலையை ரூ15க்கு உயர்த்துவது அவசியமாகின்றது. இதை பொருட்படுத்தாமல் மதுரமுரளியின் வளர்ச்சிக்காக தாங்கள் 2015-16ஆம் ஆண்டுக்கான வருட சந்தா ரூ180ஐ உடனே செலுத்தும்படி கேட்டுக் கொள்கின்றோம். அங்ஙனமே 15வருடங்களுக்கு முன் ஆயுள் சந்தாதாரராக ஆனவர்கள், விருப்பமிருந்தால், மறுபடி பிரதி வருட சந்தாதாரராக ஆகலாம் என தெரிவித்து கொள்கின்றோம். மேலும் விவரங்களுக்கு - 044-24895875 தொலைபேசியை தொடர்பு கொள்ளவும். தெய்வீக பணி தொடர்ந்து நடைபெற உங்களின் ஆதரவை எதிர்நோக்கும் ...

ஆசிரியர்- மதுரமுரளி

love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

## சனாதனப்புதிர் பகுதி 75 - விடைகள் -ஆத்ரேயன்

1. எங்கு கிருஷ்ணர் இருக்கிறாரோ அங்கு வெற்றி; கிருஷ்ணர் என்றாலே வெற்றிதான்; கோவிந்தன் அளவு கடந்த சக்தி உடையவன்; கிருஷ்ணன் இருக்கும் இடம் வெற்றி; கிருஷ்ணனை முன்னே நிறுத்தி விட்டால் வெற்றி தானாக வந்து விடும். (பீஷ்ம பர்வா அத்யாயம் **21 - 11.17**)

2. துர்கா தேவியை.

3. **13**ஸ்லோகங்களால்; பீஷ்ம பர்வா அத்யாயம் **23;** ஸ்லோகங்கள் **4-16**வரை.

4. வழக்கில் வெற்றி; வாழ்க்கையில் வெற்றி; எதிரிகளிடமிருந்து வெற்றி; லக்ஷ்மி கடாக்ஷம்; பலஸ்ருதி ஸ்லோகங்கள் **22-25** பீஷ்ம பர்வா.

5. கீதை, கங்கா, காயத்ரி, கோவிந்தா - இதை மனதில் வைத்தால் மறுபிறவி ஏற்படுவதில்லை.

6. பகவான் கிருஷ்ணன் - **620;** அர்ஜுனன் - **57;** ஸஞ்சயன் - **67;** திருதராஷ்டிரன் - **1;** மொத்தம் **745.** அத்யாயம் **43** பீஷ்மபர்வா - ஸ்லோகம் **4;**



7. எங்கு தர்மம் இருக்கிறதோ, அங்கு கிருஷ்ணர் இருக்கிறார். எங்கு கிருஷ்ணர் இருக்கிறாரோ, அங்கு ஜெயம்/வெற்றி இருக்கிறது.

8. திருதராஷ்டிரனுடைய பிள்ளையான யுயுத்ஸு.

9. மத்ர தேசத்து அதிபதியான சல்யன்,

10. விராடராஜாவின் புதல்வனான ஸ்வேதன்.

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | ஜூலை 12, 27 **July** 12, 27<br>ஆகஸ்டு 10, 26 August 10, 26 |
| ஆகஸ்டு 2 | கோவிந்தபுரம் யோகிராம்சுரத்குமார் நாமாஸ்ரமம் பிரதிஷ்டா தினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**